بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

وَلِلّٰهِ عَلَى النَّاسِ حِجُّ الْبَيْتِ مَنِ اسْتَطَاعَ إِلَيْهِ
سَبِيْلًا ۚ وَمَنْ كَفَرَ فَإِنَّ اللّٰهَ غَنِيٌّ عَنِ الْعٰلَمِيْنَ ﴿٩٧﴾

'அங்கு பயணம் செய்ய வசதி வாய்ப்பை பெற்றிருக்கும் மனிதர்கள் அல்லாஹ்வுக்காக அவ்வீடு சென்று ஹஜ் செய்வது கடமையாகும். எவரேனும் இதை நிராகரித்தால், நிச்சயமாக அல்லாஹ் எவர் தேவையற்றவனுமாக இருக்கிறான்.' - அல்குர்ஆன்

عن أبي هريرة رضي الله عنه أن رسول الله صلى الله عليه وسلم قال: ( العمرة إلى العمرة كفارة لما بينهما، والحج المبرور ليس له جزاء إلا الجنة)

رواه البخاري ومسلم.

---

"ஒரு உம்ரா செய்வது மறு உம்ரா வரையிலுள்ள பாவங்களின் பரிகாரமாகும். பாவம் கலவாத ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹஜ்ஜுக்கு சொர்க்கத்தைத் தவிர வேறு கூலி இல்லை".

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி, முஸ்லிம் ஹதீஸ் எண் : 1773

---

# تلبية தல்பியா

لَبَّيْكَ ۝ اَللّٰهُمَّ لَبَّيْكَ ۝ لَبَّيْكَ لَا شَرِيْكَ لَكَ لَبَّيْكَ ۝
إِنَّ الْحَمْدَ وَالنِّعْمَةَ لَكَ وَالْمُلْكَ لَا شَرِيْكَ لَكَ ۝

**லப்பைக், அல்லாஹும்ம லப்பைக், லப்பைக் லா ஷரீக்க லக்க லப்பைக், இன்னல் ஹம்த வன் நிஃமத, லக்க வல்முல்க் லாஷரீக்க லக்க.**

இதோ வருகை தந்(து தாழ் பணிந்)தேன் யா அல்லாஹ்!
இதோ நான் வருகை தந்துள்ளேன். நான் வருகை தந்துள்ளேன்
உனக்கு யாதோர் இணையுமில்லை. இதோ நான் வருகை தந்துள்ளேன்.
நிச்சயமாக புகழனைத்தும், பாக்கியமனைத்தும் உனக்கே சொந்தம்!
ஆட்சியனைத்தும் உனக்கே! உனக்கு யாதோர் இணையுமில்லை.

# நிறுவன அறிமுகம்

அன்பான உங்களுக்கு..

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு

ஹஜ் கமிட்டி மூலம் தேர்வு செய்யப்பட்டு செல்லக் கூடிய பயணிகளுக்கு ஹஜ்ஜின் அமல்கள் முறையாக செய்ய சரியான வழிகாட்டுதல் இல்லாமலும், உணவு தயாரிப்பை பயணிகளே செய்து கொள்ள வேண்டிய சூழ்நிலை இருப்பதையும், தங்குமிடங்கள் ஹரம் ஷரீபுக்கு அருகில் இல்லாத நிலைகளையும், தடையின்றி பயணம் புறப்படுவதையும், கருத்தில் கொண்டு இதன் அடிப்படையில் திட்டமிட்ட நடவடிக்கைகளுடன் தகுந்த உதவியாளர்களுடன் எல்லாவற்றுக்கும் மேலாக அருளாளன் அல்லாஹ்வின் அளப்பரிய அருளுடன்...

**....1988** - ம் ஆண்டு மகிழ்வுடன் **''தீன் ஹஜ் சர்வீஸ்''** துவங்கப்பட்டு 1989 - ம் ஆண்டில் முதல் ஹஜ் குழு அழைத்துச் செல்லப்பட்டது. தொடர்ந்து ஆண்டு தோறும் படிப்படியாக முன்னேறி அடக்கத்துடன் 2009 ம் ஆண்டு (22-ம் ஆண்டு) பயணத்தையும் சிறப்பாய் நிறைவு செய்தோம். **அல்ஹம்துலில்லாஹ்! அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்!**

அல்லாஹ்வின் விருந்தினர்களாகிய ஹாஜிகளின் பாராட்டும், மேலான துஆவும், ஆண்டுதோறும் நமது குழுவில் அதிகரித்து வரும் ஹாஜிகளின் எண்ணிக்கை!

2001 - ம் ஆண்டின் ஹஜ் பயணத்தின் போது சவூதி ஹஜ் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் கிழக்காசிய முஅஸ்ஸஸா அமைப்பின் No. 1 முஅல்லிம் **வலீத் இஸ்கந்தர்** அவர்களால் ''**சிறந்த சேவை நிறுவனம்**'' என தீன் ஹஜ் சர்வீஸ் விருது பெற்றது.

2008-ம் ஆண்டின் ஹஜ் பயணத்திலும், 2009-ம் ஆண்டிலும் **முஅல்லிம் உமர் சிராஜ் (Office No.45)** அவர்களால் **''சிறப்பான சேவை''** என சான்றிதழ் பெற்றது.

இவையாவும் இப்பணியில் எங்களை ஊக்கப்படுத்தின.

கண்ணியமிக்க கஃஅபாவின் சொந்தக்காரனாகிய அந்த அருளாளன் அல்லாஹ்வுக்கும், எங்களுக்கு இப்பணியில் உறுதுணையாய் உற்ற தோழமையாய் நிற்கும் அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

மிக்க அன்புடன்

ஹாஜிகளின் ஊழியன்

**S.N. அகமது தம்பி**

தீன் ஹஜ் சர்வீஸ்

# நமது குழுவின் பயண ஏற்பாடு

இந்த வருடம் ஹஜ்ஜை முடித்துத்திரும்பிய பிறகு எங்களுடன் ஹஜ்ஜுக்கு வந்திருந்த ஹாஜிகளிடமும், வழிகாட்டிகளிடமும், பிரதிநிதிகளிடமும், அபிப்பிராயங்கள், ஆலோசனைகள் கேட்டு எங்கள் சிறப்பான தொடர்ச்சியான ஹஜ்ஜுப் பயணத் திட்டத்தை அறிவிக்கிறோம். **அல்ஹம்துலில்லாஹ்!**

நமது ஹாஜிகளை திருப்திகரமாக உபசரித்து, உற்சாகமூட்டி ஹஜ்ஜின் வழிமுறைகள் காட்டித் தந்து, மனநிறைவுடன் ஹஜ்ஜை பூர்த்தி செய்வதற்கு வசதியாக ஒரே குழுவாக இன்ஷா அல்லாஹ் அரசு நிர்ணயித்த அளவு அங்கத்தினர்களை மட்டும் அழைத்துச் செல்வது என்று முடிவு செய்துள்ளோம்.

நமது குழுவிலுள்ள பயணிகள் நிர்ணயிக்கப்பட்ட பயண தேதியின்படி பிரயாணம் செய்ய முடிவு செய்யப் பட்டிருப்பதுடன் அனைவரையும் அன்புடன் உபசரித்து அழைத்துச் செல்ல அனுபவமுள்ள வழிகாட்டிகளும், ஆலிம்களும், மருத்துவர்களும், பிற ஊழியர்களும் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

கடந்த ஆண்டுகளைப் போலவே, தமிழக உணவு வழங்குவதற்காக தமிழ்நாட்டைச் சேர்ந்த அனுபவமிக்க சமையற்காரர்களையும் உடன் அழைத்து வருகிறோம்.

நோன்பு பெருநாள் கழித்து சில நாட்களுக்குப்பின், பயணம் புறப்படும் ஹாஜிகளை ஒரு பயிற்சி கூட்டத்திற்காக அழைத்து ஹஜ், உம்ரா - செயல்முறைகள், பயணத்திற்கு முன் உண்டான ஒழுங்குகள், பயண விபரங்கள், பயண நிர்வாக விஷயங்கள் குறித்து விரிவாக பயிற்சி முகாம் ஒன்று நடத்தப்படும். அதில், பயணிகள் அனைவரும் அவசியம் பங்கு பெற வேண்டும்.

குறிப்பிடப்பட்ட பயண தேதிக்கு ஒரு நாள் முன்னதாக பயணிகள் அனைவரும் சென்னை வந்து சேர வேண்டும். முதல் நாளில் பயணப் பைகளை ஒப்படைத்துவிட்டு, பயண டாக்குமெண்டுகளை பெற்றுக் கொண்டு, அவர்களது பொறுப்பில் தங்கிக் கொள்ள வேண்டும்.

பயண தினத்தன்று குறிப்பிடப்படும் நேரத்திற்கு பயணிகள் விமான நிலையம் வர வேண்டும். அங்கிருந்து புறப்பட்டு இன்ஷா அல்லாஹ் ஜித்தாவில், ''ஹஜ் டெர்மினல் விமான நிலையத்தில்'' இறங்கி, இமிகிரேஷன், கஸ்டம்ஸ், முதலிய அரசு சம்பந்தப்பட்ட பரிசீலனைகள் முடிந்ததும் A/c பேருந்துகளில் புனித மக்காவுக்கு புறப்படுவோம். புனித மக்காவை அடைந்ததும், உம்ராவை நிறைவேற்ற வழிகாட்டிகள் அழைத்துச்செல்வார்கள்.

★ ஹஜ்ஜுக்கு முன் மினா அருகில் தங்குவோம். ஹஜ்ஜுக்குப்பின் ஹரம் ஷரீப் அருகாமையில் ஹோட்டல்களில் தங்குவோம்.

★ புனித மக்காவில் ஹரம் ஷரீபிலேயே ஒவ்வொரு வக்து தொழுகையையும் ஜமாஅத்துடன் நிறைவேற்றிக் கொள்ள வசதியாக ஹரம் ஷரீபுக்கு மிக அருகில் ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட அறைகள் கொண்ட கட்டிடத்தில் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.

★ மக்காவில் தங்கும் காலங்களில் நமது தங்குமிடத்திலேயே தினசரி ஒரு மணி நேரம் உலமாப் பெருமக்களைக் கொண்டு சிறப்பாக ஹஜ் அமல்கள், ஜியாரத் பற்றிய விளக்க பயான் நடைபெறும்.

★ ஹாஜிகள் அவசியம் இந்த நிகழ்ச்சியில் பங்கு கொண்டு, தங்களது ஹஜ் அமல்களை பரிபூரணமானதாக நிறைவேற்ற வேண்டும். மக்பூலான ஹஜ்ஜைப் பெற வேண்டும்.

★ மக்கா முகர்ரமாவில் சரித்திர முக்கியத்துவம் பெற்ற இடங்களை பஸ்களில் அழைத்துச் சென்று விவரித்துக் காண்பிக்கப்படும். இவற்றில் முக்கியமான இடங்களில் இறங்கி தொழுவதற்கும் அனுமதிக்கப்படும். கம்பெனி பொறுப்பில் வாரம் இருமுறைகள் உம்ரா சென்றுவரவும் ஏற்பாடு செய்யப்படும்.

★ மினாவில் நமது முஅல்லிம் மூலம் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கும் ஏர்கூலர் கூடாரங்களில் தங்குவோம். **ஹஜ் கிரியைகள் துல்ஹஜ் பிறை 8ல் ஆரம்பம்.**

★ மினா கூடாரங்களில் பிறை 8 அன்று முழுமையாக தங்கி ஐந்து நேர தொழுகைகளை நிறைவேற்றி, பிறை 9 அன்று **அரஃபா** சென்று, லுஹரும் அஸரும் தொழுது, மனமுருக துஆக்கள் நிறைய செய்து, அன்றைய அந்திப் பொழுது அடிசாய்ந்த பின் அரபாவிலிருந்து புறப்பட்டு **முஜ்தலிபா** என்னும் **'மஷ்அருல் ஹராம்'** வந்து மக்ரிபையும் இஷாவையும் சேர்த்து தொழுது, அங்கும் துஆக்கள் செய்து, மறுநாள் பிறை 10 காலை பஜ்ருக்குப் பின் மினா கூடாரம் வந்து சேர்வோம். அங்கு முறையே கற்கள் எறிந்து, குர்பானி கொடுத்து, முடி களைந்து-ஹஜ் கிரியைகளை முழுவதுமாக நிறைவு செய்வோம். கல்லெறிவதற்கு ஹாஜிகள் வழிகாட்டுதலுடன் ஒரே குழுவாக மூன்று நாட்களிலும் அழைத்துச் செல்லப்படுவார்கள்.

★ ஹஜ் கிரியைகளை சரியாக அறிந்து கொள்ள - ஹஜ் விளக்கப்புத்தகம், ஹஜ் - உம்ரா அமல்களில் ஓதக்கூடிய துஆக்கிதாபுகளும், சரித்திர முக்கியத்துவம் பெற்ற இடங்களின் குறிப்புகள் அடங்கிய புத்தகமும் விநியோகிக்கப்படும்.

★ ஜித்தா - மக்கா - மதீனா - மினா - அரஃபா - முஜ்தலிபா - ஜியாரத் - ஆகிய தரைவழிப் பயணங்களில் குளிர்சாதன பேருந்து வசதிகள்.

★ புனித மதீனாவிலும் ஒவ்வொரு வக்து தொழுகையையும் மஸ்ஜிதுந் நபவீயில் ஜமாஅத்துடன் நிறைவேற்றிக் கொள்ள வசதியாக மஸ்ஜிதுந் நபவீக்கு அருகில் ஏர் கண்டிஷன் செய்யப்பட்ட அறைகள் கொண்ட கட்டிடத்தில் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.

★ புனித மதீனாவிலும் சரித்திர முக்கியத்துவம் பெற்ற இடங்களை ஜியாரத் செய்வதற்காக பேருந்துகளில் அழைத்துச் சென்று விவரித்துக் காண்பிக்கப்படும்.

★ மதீனா முனவ்வராவில் 8 முதல் 9 தினங்கள் வரை தங்கி 40 வக்து தொழுகைகளை நிறைவு செய்வோம்.

சென்ற பல ஆண்டுகளில் நமது ''தீன்'' குழுவில் தமிழகத்திலிருந்தும், அயல்நாடுகளிலிருந்தும் தமிழக சகோதர சகோதரிகளும் பரவலாகவே பல ஊர்களிலிருந்து வந்து தங்களது புனிதக் கடமைகளை நிறைவேற்றியுள்ளனர்.

இன்ஷா அல்லாஹ் உங்களுக்கான சேவைகளை இன்னும் சிறப்பாக செயலாற்ற முயற்சிகள் தொடங்கப்பட்டுள்ளது. விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்திலிருந்தோ, தங்கள் பகுதி பிரதிநிதிகளிடமிருந்தோ பெற்று பூர்த்தி செய்து அனுப்பி தங்களது இடங்களை பதிவு செய்யுங்கள்.

ஹஜ் சர்வீஸ் கம்பெனிகள் பல நடந்து வரும் இந்நாளில் தரமான, திறமையான, நம்பிக்கையான, அரசு அங்கீகாரம் பெற்ற ஹஜ் சர்வீஸ் எது என்பதைப் பக்குவமாய்ப் பகுத்துணர்ந்து, தேர்ந்தெடுப்பது உங்கள் தலையாயப் பொறுப்பு.

இது ஒத்திப்போட வேண்டிய கடமையல்ல. உடனடியாய் செய்ய வேண்டிய உயர் கடமை!

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதோடு மட்டுமின்றி அந்த மண்ணில் உயிர் பெறும் உணர்வுகள், அந்த கஅபாவைக் காணும் பேரின்பம் எழுத்தில் வடிக்க இயலாதது. அந்த உணர்வுகளைப் அனுபவிக்க உடனடியாகப் புறப்படுங்கள்.

எங்கள் குழுவில் வந்த ஹாஜிகளால் வார்த்தைகளாலும் எழுத்துக்களாலும் எங்கள் மீது தூவப்பட்ட பூக்கள் ஏராளம், ஏராளம். அவர்களின் மேலான துஆக்களால் இன்னும் சிறப்பாகச் செயல்பட ஆர்வம் கொள்கிறோம்.

- நமது தீன் ஹஜ் குழுவினர் ஹஜ்ஜுக்கு சில தினங்கள் முன்பதாகவே அழைத்துச் செல்லப்பட்டு மினா அருகில் தங்கி, பின் அங்கிருந்து ஹஜ்ஜுக்காக மினா சென்று, ஹஜ் முடிந்தவுடன் ஹரம் ஷரீப் அருகில் உள்ள ஹோட்டலில் தங்க ஏற்பாடு செய்யப்படுகிறது.
- திட்டமிட்ட பிரயாணம்,- தாமதமில்லாத பயணம்.
- அன்றாடம் அறிவுக்கு இதமளிக்கும் சொற்பொழிவுகள், அமலுக்கு ஆர்வமூட்டும் உணவு வகைகள்.
- உஷ்ணம் தணிக்க இதமான கனி வகைகள்.
- உடல்நலம் குன்றின் உடனே கவனிக்க மருத்துவ வசதி.
- புன்னகை மாறா இன்முகமாய் தேவைகள் அறிந்து சேவைகள் செய்திடும் உன்னத ஊழியர்கள்.
- இபாதத்துகளுக்கு வசதியாகவும், பெண்களும் தனியாகச் சென்று வரும் வகையிலும் ஏற்பாடு செய்யப்பட்ட ஹரமுக்கு அருகிலுள்ள தங்குமிடங்கள்.

இடமின்மை எனும் ஏமாற்றத்தை தவிர்க்க இன்றே இப்பொழுதே **தீன் ஹஜ் சர்வீஸ்** நிறுவனத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

உங்களை அன்போடு வழிநடத்தி சேவை செய்வதை கடமையென கருதுகிறது உங்கள் **''தீன் ஹஜ் சர்வீஸ்''**.

# பயணத்திட்டம் (பேக்கேஜ்) ஹஜ் 2010

புனித ஹஜ்ஜுக்கு சில தினங்கள் முன்பதாகவே இங்கிருந்து புறப்பட்டு-புனித மக்கா சென்று மினா அருகில் தங்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

துல்ஹஜ் பிறை 8 முதல் ஹஜ் கிரியைகள் துவக்கம். அதற்கு வசதியாக பிறை 7 பின்னிரவில் மினாவுக்கு வந்து கூடாரங்களில் தங்குவோம்.

ஹஜ்ஜின் கிரியைகள் பிறை 8 முதல் 13 வரை முறையே மினா - அரஃபா - முஸ்தலிபா சென்று, முடிவில் மினாவில் தங்கி 3 நாட்கள் ஷைத்தானுக்கு கல்லெறிந்து, ஹஜ் கடமையை பூரணமாக நிறைவு செய்து திரும்புவோம்.

பின் துல்ஹஜ் பிறை 14 முதல் 30 வரையிலும் ஹரம் ஷரீபுக்கு மிக அருகாமையில் இருக்கும் 3 ஸ்டார் ஹோட்டலில் தங்குவோம். நாம் தங்கியிருக்கும் காலங்களில் எல்லைப் பள்ளியான ஆயிஷா பள்ளிக்கு வாரம் இரு முறைகள் சென்று, இஹ்ராம் அணிந்து, கூடுதல் உம்ராக்கள் வழிகாட்டுதலுடன் செய்திட ஏற்பாடு செய்யப்படும்.

மக்காவில் சரித்திர முக்கியத்துவம் பெற்ற இடங்களுக்கு வழிகாட்டிகளுடன் அழைத்துச் சென்று பார்த்து வருவோம். மதீனாவுக்கு புறப்படும் முன், தவாஃபுல் விதா - செய்து, மனமுருக பிரார்த்தித்து, மாண்பாளன் மன்னிப்பை முழுமையாகப் பெற்று, மக்பூலாய், மப்ரூராய் மன நிறைவாய் அருள் பெற்று அங்கிருந்து புறப்படுவோம்.

முஹர்ரம் மாதம் துவக்கத்தில் மக்காவிலிருந்து மதீனா முனவ்வரா சென்று, ஹரம் அருகில் 4 ஸ்டார் ஹோட்டலில் தங்கி, மாநபி (ஸல்-அம்) அவர்களின் ஜியாரத் செய்து, மனம் குளிர மான்புடனே தினமும் நபி முன்னே ஸலாம் கூறுவதுடன் 40 வக்த்து தொழுகைகளையும் மஸ்ஜிதுந் நபவீயில் முழுமையாக நிறைவேற்றுவோம்.

மதீனாவிலும் சரித்திர முக்கியத்துவம் பெற்ற இடங்களை வழிகாட்டிகளுடன் சென்று பார்த்து வருவோம்.

8 தினங்கள் மதீனாவில் தங்கி, பின் அங்கிருந்து புறப்பட்டு ஜித்தா விமான நிலையம் வந்து தாயகம் திரும்புவோம். **இன்ஷா அல்லாஹ்.**

| | | |
|---|---|---|
| **பயண தேதி** | : | (இன்ஷா அல்லாஹ்) 08.11.2010 |
| **பயண நாட்கள்** | : | 35 முதல் 40 தினங்கள் வரை (விமான கால அட்டவணைக்கேற்ப) |

அறிவிக்கப்படும் செலவுத் தொகை 2010 பிப்ரவரி மாதத்தில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ஏர் டிக்கெட், வெளிநாட்டுச் செலாவணி மற்ற கட்டணங்களின் அடிப்படையில் அமைந்ததாகும்.

விமான டிக்கெட், ஹஜ் விசா, அந்நிய செலாவணி (BTQ), முஅல்லிம் கட்டணம், மக்கா - மதீனா - ஜித்தா இடையே ஏர்கண்டிஷன் பஸ் பயணங்கள், மக்கா மதீனாவில் நவீன தங்குமிடங்கள், உணவு ஏற்பாடுகள், மினா, அரஃபா, முஜ்தலிபா பஸ் பயணங்கள் மற்றும் கூடாரக் கட்டணங்கள், மருத்துவ உதவி, வழிகாட்டிகள் - சேவைச் செலவுகள் அனைத்தும் சேர்த்து இந்த பிரயாணத்தின் செலவுத் தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ரூபாய் **50,000/-** மட்டும் முன்பணம் செலுத்திப் பதிவு செய்து கொள்ளுங்கள். பாக்கித் தொகையை செலுத்தும் தேதி பின்னர் தெரிவிக்கப்படும்.

விமான டிக்கெட் உறுதியாவதைப் பொறுத்து புறப்படும் தேதியில் மாற்றம் ஏற்படலாம். புறப்படும் உறுதியான தேதி புறப்படுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு அனைவருக்கும் தெரிவிக்கப்படும்.

நாம் புறப்படுவதற்கிடையில் ஏர் டிக்கெட், அந்நிய செலாவணி, மற்ற கட்டணங்களின் விலை ஏற்றம் ஏற்பட்டால் அந்த கூடுதல் தொகையை பயணிகள் அவசியம் செலுத்த வேண்டும்.

## ஹாஜிகளின் சொந்தப் பொறுப்பில் உள்ள செலவுகள்

1. மேலதிக லக்கேஜ் கட்டணம் மற்றும் சுமை கூலி. (30கிலோவுக்கு மேல் இருந்தால் மட்டுமே)
2. குர்பானி. (சுமார் 400 ரியால்)
3. தவாஃபே ஜியாராவுக்காக மினாவிலிருந்து மக்காவுக்கு வந்து போகும் செலவு. (சுமார் 40 ரியால்)

## விண்ணப்பத்துடன் அனுப்பி வைக்கப்பட வேண்டியவை

1. முன்பணம் ரூ.50,000/-க்கு M/s.Dheen Haj Service என்ற பெயரில் கிராஸ் செய்யப்பட்ட டிராப்ட் *(Payable at Chennai or Kumbakonam)*
2. கலர் போட்டோ (6cm x 4cm அளவில் ) (பேக்ரவுண்ட் வெள்ளையாக இருக்க வேண்டும்) - 6
3. பயணத் தேதியிலிருந்து குறைந்த பட்சம் 6 மாதம் வரை செல்லத்தக்க இண்டர்நேஷனல் பாஸ்போர்ட். பயணத்திற்கு 60 நாட்களுக்கு முன் ஒரிஜினல் பாஸ்போர்ட் சமர்ப்பிக்க வேண்டும்.

## விதிமுறைகள் - விளக்கங்கள்

1. DHEEN HAJ SERVICE என்ற பெயரில் கிராஸ் செய்யப்பட்ட சென்னை அல்லது கும்பகோணத்தில் மாற்றத்தக்க பேங்க் டிராப்ட் மூலமே கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். வெளியூர் செக் அல்லது ரொக்கம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. பணம் செலுத்திய உடன் இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். பயணம் முடியும் வரை பயணிகள் இரசீதை வைத்திருக்க வேண்டும்.
2. அட்வான்ஸ் பணம் செலுத்தாத விண்ணப்பங்கள் பதிவு செய்து கொள்ளப்படமாட்டாது.
3. கட்டணங்கள் செலுத்திய உடன் முறையான ரசீதுகள் பெற்று உறுதி செய்துகொள்ளுங்கள். கம்பெனி ரசீது இல்லாமல் செலுத்திய தொகைக்கு கம்பெனி பொறுப்பேற்காது.
4 இந்த பிரயாணத்திற்கு இண்டர்நேஷனல் பாஸ்போர்ட் அவசியம் தேவை.
5. இண்டர்நேஷனல் பாஸ்போர்ட் இல்லாதவர்கள் இந்தப் பிரயாணத்தில் கலந்து கொள்ள முடியாது. எனவே தற்சமயம் பாஸ்போர்ட் இல்லாதவர்கள் உடனே பாஸ்போர்ட் பெற விண்ணப்பித்து பயணத் தேதிக்கு 60 தினங்களுக்கு முன் தங்களின் பாஸ்போர்ட்டை சமர்ப்பிக்க வேண்டும். ஏற்கனவே பாஸ்போர்ட் வைத்திருப்பவர்களும் பயணத் தேதியிலிருந்து ஆறு (6) மாதம் வரை செல்லத்தக்கதா? என்பதை சரி பார்த்துக் கொள்ள வேண்டும். ஆறு மாதத்திற்கு முன் காலாவதியாகக் கூடியதாக இருந்தால் அதையும் உடனே புதுப்பித்துக் கொள்ள ஏற்பாடு செய்து கொள்ளவும். பாஸ்போர்ட்டில் குறைந்தது 2 இரட்டை பக்கங்கள் காலியாக இருத்தல் வேண்டும்.
6. பெண்கள் சட்டபூர்வமான (மஹ்ரம்) துணையுடன் விண்ணப்பிக்க வேண்டும். சவூதி அரசின் புதிய சட்டப்படி குறிப்பாக 40 வயதிற்குட்பட்ட பெண்கள் தங்களது **கணவர்** அல்லது **சகோதரர்** அல்லது **தகப்பனார்** ஆகிய மஹ்ரம் துணையுடன் **மட்டுமே** அனுமதிக்கப்படுவர்.
7. கர்ப்பிணிப் பெண்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
8. தனது சொந்த பலத்தில் நடமாட முடியாத அளவுக்கு பலஹீனமானவர்களும், கண் பார்வையற்றவர்களும், பெரும் வியாதியஸ்தர்களும், அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
9. இதில் அறிவிக்கப்பட்டிருக்கும் பிரயாண முறைகளும் தேதியும் மிகவும் பரிசீலனைக்குப் பிறகு வெளியிடப்பட்டிருக்கிறது. ஆனால் எதிர்பாராத விதமான வேலை நிறுத்தம், புயல், மழை, அல்லது வேறு காரணங்களினால் மாறுதல் ஏற்பட்டாலும் பிரயாணத்தில் தாமதங்கள் ஏற்பட்டாலும் அதை அனுசரித்து நடந்து கொள்ளவேண்டும்.
10. ஹஜ்பயண விமானங்களுக்கோ, பஸ்களுக்கோ, சவூதியில் தங்கும் கட்டிடங்களுக்கோ நாங்கள் உரிமையாளர்கள் அல்ல. நாங்கள் பயண ஏற்பாட்டின் பொறுப்பாளர்கள் மட்டுமே. எதிர்பாராத விதமாக மேற்படி ஏற்பாடுகளில் தாமதங்கள் அல்லது மாற்றங்கள் ஏற்படின் பயணிகளுக்கு அது சமயம் தெரிவிக்கப்படும். அவற்றை பயணிகள் அனுசரித்து நடந்து கொள்ளவேண்டும். பயண காலங்களில் தங்களின் பொருட்களை அவ்வப்போது சரிபார்த்துக்கொள்ள வேண்டும். காணாமல் போவது, திருட்டுப் போவது முதலியவைகளுக்கு கம்பெனி பொறுப்பேற்றுக் கொள்ள இயலாது.

11. புனித பயணம் மேற்கொள்பவர்கள் குழுவினரோடு சென்று ஒன்றாகவே திரும்பி வரவேண்டும். எந்த இடத்திலும் அதிக நாட்கள் தங்குவதற்கு அனுமதியில்லை.

12. அரசு மூலம் ஏற்பாடு செய்யப்படும் முகாமுக்குச் சென்று காலரா, மூளைக்காய்ச்சல், தடுப்பு ஊசிகள் போட்டுக் கொள்வது அவரவரது பொறுப்பாகும். இதற்கான ஆலோசனை மற்றும் தடுப்பூசி அட்டைகள் வழங்கப்படும்.

13. எவரேனும் தங்களின் பயணத்தை **பயணம் புறப்படும் தேதிக்கு இரு மாதங்கள்** முன்பதாக ரத்து செய்தால் சர்வீஸ் சார்ஜ் **ரூ.2000/-** மட்டும் பிடித்தம் செய்து பாக்கித் தொகை திருப்பித்தரப்படும். அதற்குபின் ரத்து செய்பவர்களுக்கு ஹஜ் முடிந்து திரும்பிய பிறகே மக்கா, மதீனா தங்குமிட வாடகை செலவு, விசா செலவு, டிக்கெட் கேன்சல் செலவுகள் பிடித்தம் போக பாக்கித் தொகை அனுப்பி வைக்கப்படும். இதில் விமான டிக்கெட் மற்றும் முஅல்லிம் பீஸ் மட்டும் திரும்பக் கிடைக்கும் என்பதை அறியவும்.

14. பதிவு செய்த பயணிகளில் எவரேனும் பயணத்திற்கு ஒரு மாதத்திற்கு முன் இறந்து விட்டால் உடனே தகவல் தெரிவிக்க வேண்டும். அவர்களால் செலுத்தப்பட்ட தொகை பிடித்தம் போக அவர்களால் நியமிக்கப்பட்ட (நாமினி) பொறுப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படும்.

15. பெண்கள் விலையுயர்ந்த ஆபரணங்களை அணிந்து வரவேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

16. போதைப் பொருட்கள், கசகசா, ஆயுதங்கள் போன்றவை சவூதி அரசாங்க சட்டப்படி தடைசெய்யப்பட்டவை. (மரண தண்டனை விதிக்குட்பட்டது) எனவே இத்தகைய பொருட்களைக் கொண்டு வரக்கூடாது.

17. சீதோஷ்ணநிலை மாற்றம், விபத்துகள் மற்றும் வேறு காரணங்களால் ஏற்படும் பொருள் நஷ்டங்கள், வியாதிகள், உயிரிழப்பு போன்றவைகளுக்கு கம்பெனி பொறுப்பல்ல. எனினும் வியாதியின் அறிகுறிகள் தென்பட்டவுடன் பொறுப்பாளர்களிடமோ, மருத்துவரிடமோ தெரிவித்தால் உடனடியாக மருத்துவ நிவாரண ஏற்பாடுகள் செய்யப்படும்.

18. வீடியோ சிடி வைத்திருந்தால், சுங்கப் பரிசோதனையில் அது முழு பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதில் காலதாமதமும், சிரமமும் ஏற்படும். எனவே தவிர்த்துக் கொள்ளவும்.

19. பயணிகளுக்கு அளிக்கப்படும் அடையாளக்கார்டுகள் **(Identity Card)** கவனமாக வைத்திருப்பதுடன் தங்களது பதிவு நம்பரையும் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

20. பெண்கள் பர்தாவுடன் இருப்பதற்க்கும் கூச்சமின்றி நடமாடுவதற்கும் வசதியாக ஆண்கள் தனியாகவும் பெண்கள் தனியாகவும் தனித்தனி அறைகளில் தங்க வைக்கப்படுவார்கள். எனவே, ஒவ்வொருவரும் அவர்களது துணிமணிகளையும், சாமான்களையும் தனித்தனியாய் வைத்துக் கொள்ள வேண்டும். பெண்கள் ஹஜ் பயண காலங்களில் நிறுவனம் வழங்கும் தலைத் துணியை அவசியம் அணிந்திருக்க வேண்டும்.

21. தங்களை சந்திக்க வரும் பார்வையாளர்களை தங்கள் அறைகளில் தங்க வைத்துக் கொள்ளக்கூடாது. பார்வையாளர்களால் மற்ற ஹாஜிகளுக்கு சிரமம் ஏற்படுவதை கவனத்தில் கொண்டு நடந்துகொள்ள வேண்டும்.

22. மினா - அரஃபாத் ஆகிய இடங்களில் அரசாங்க உத்தரவின்படி முஅல்லிம்கள் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் கூடாரங்களிலேயே தங்க வேண்டும். இங்கு மெத்தைகள் இருக்காது. தரையில் ஜமுக்காளம் விரிக்கப்பட்டிருக்கும். அதன் மீது நமது ஜமுக்காளங்கள் துணிகளை விரித்துக் கொள்ளவேண்டும். மினா, அரஃபாத் ஆகிய இடங்களில் கூடாரங்கள் ஒரே மாதிரி அமைப்பிலேயே இருக்கும். எல்லோரும் இஹ்ராம் ஆடையுடனேயே இருப்பார்கள். நமது கூடாரத்தை விட்டு வெளியில் சென்று விட்டால் நமது இடத்தைக் கண்டுபிடித்து மீண்டும் வந்து சேர்வது சிரமம். எனவே நமது கூடாரத்தில் நடக்கும் ஜமாஅத்துடன் சேர்ந்து தொழுகைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்.

23. காலை உணவு, 8 மணி முதல் 9.30 மணிக்குள் வழங்கப்படும். பகல் உணவு லுஹர்தொழுகைக்குப் பின் உடன் வழங்கப்படும். இரவு உணவு இஷாதொழுகைக்குப் பிறகு உடன் வழங்கப்படும். காலை, மாலை, தேநீர் வழங்கப்படும். உடல்நிலை சரியில்லாதவர்கள் முன் கூட்டியே தெரிவித்து விட்டால் அவர்களுக்குத்தகுந்த உணவு வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

24. ஹஜ் முடிந்து வரும்போது ஒவ்வொருவருக்கும் 30 கிலோ லக்கேஜ் மட்டுமே விமான நிறுவனத்தால் அனுமதிக்கப்படுகிறது. இதற்கு மேலாக உள்ள லக்கேஜுக்கு கிலோவுக்கு சுமார் 35 ரியால் ஏர்லைன்ஸ் நிறுவனத்தினருக்கு செலுத்த நேரிடும்.

குறைவான சுமை இருப்பது பயணத்தை எளிதாக்கும். எனவே இயன்றவரை லக்கேஜை குறைத்துக் கொள்ளுங்கள். கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை மட்டுமே எடுத்து வந்தால் போதுமானது.

## பயணத்தில் கொண்டு வரவேண்டியவை

- **இரண்டரை மீட்டர் அளவில் (ஆண்களுக்கு) இஹ்ராம் துணி-4. (2-செட்)**
- **பெண்களுக்கு தையலுள்ள வழமையான ஆடைகளே இஹ்ராமிலும் போதுமானது. புர்கா, குப்பாயம் அணிந்து கொள்வது வசதியானதும் பாதுகாப்பானதுமாகும்.**
- **சாதாரணமாக அணிந்து கொள்ள 4 - செட் - ஆடைகள்.**
- **மதீனாவுக்கு செல்லும் போது (ஆண்களுக்கு) அணிந்து கொள்ள புதிய வெள்ளை ஆடை 1 செட் இருப்பது விரும்பத்தக்கது.**
- **முசல்லா - மிஸ்வாக் - தஸ்பீஹ்**
- **டூத்பேஸ்ட - பிரஷ் - சோப் வகைகள்**
- **வழக்கமாக சாப்பிடும் மருந்து வகைகள் (மருத்துவர் சீட்டுடன்)**
- **மினாவுக்கு பெட்ஷீட், ஏர்பில்லோ.**

## தமிழகமெங்கும் எங்கள் பிரதிநிதிகள்

| | | |
|---|---|---|
| திட்டச்சேரி | **M.S.A. ஷேக் முஹம்மது மன்பஈ** | **04365 - 234151 / 94427 24919** |
| பள்ளப்பட்டி | **N.A. கலீலுர் ரஹ்மான் பாகவி** | **04320 - 240952 / 94432 - 07451** |
| கடையநல்லூர் | **M.S. முகம்மது யூசுப் உலவி** | **04633 - 240906, 98650 74071** |
| ஈரோடு | **K.K.A. முஹம்மது ஹுஸைன்** | **Cell : 98430 20010, 97916 74525** |
| பாண்டிச்சேரி | **B. முஹம்மது சயீது பாகவி** | **Ph: 0413 - 2345044, 2343962** |
| காரைக்கால் | **A. ஜெஹபர் அலி** | **Ph 04368 - 220844 / Cell 94424 20600** |
| கோட்டகுப்பம் | **M. ஜஹிருத்தீன் ஆலிம்** | **Ph: 0413 - 2235409, 2227263** |
| கும்பகோணம் | **T.S. ஷீது முஹம்மது ஆலிம்** | **Ph: 0435 - 2425269, Cell : 94434 10121** |
| மதுரை | **A. பீர் முஹம்மது பாகவி** | **Cell : 94439 79187, 96297 29314** |
| கம்பம் | **பிஸ்மி முகம்மது இஸ்ஹாக்** | **Ph: 276418 (Off), 272786 (R)<br>Cell : 94434 - 46986** |
| இளையான்குடி | **P.K.A. முஹம்மது ஆரிப்** | **Cell : 99420 38377** |
| சிதம்பரம் | **A. முஹம்மது இப்ராஹிம்** | **Ph : 04144 - 254255 (Resi)<br>Cell : 94434 22552** |
| தக்கலை | **N.S.S. தாஜுத்தீன்** | **Ph: 04651 - 250351 (R), 355665<br>Cell : 94434 49344, 90421 09351** |
| நாகர்கோவில் | **K.P.M. அபுல் ஹஸன்** | **Ph: 04652 - 241498** |
| பரங்கிப்பேட்டை | **H. முகம்மது அலி ஜின்னா** | **Ph: 04144 - 253550<br>Cell : 98948 20867** |
| திருப்பூர் | **H.M. ஜபருல்லாஹ் பாகவி** | **Cell : 94430 62130** |

## தமிழகமெங்கும் எங்கள் பிரதிநிதிகள்

| | | |
|---|---|---|
| பண்டாரவாடை | **K.A. அப்துல் பாஸித் ஆலிம்** | Ph: 04374 - 252003 Cell : 94439 27147 |
| நன்னிலம் | **F. அப்துல் சத்தார்** | Ph: 04366 - 230332 Cell : 94431 14344 |
| அபிவிருத்தீஸ்வரம் | **T.M.M. தாஜுத்தீன்** | Ph: 04366 - 232150, Cell : 98435 71866 |
| லெட்சுமாங்குடி | **சேவுராய் ஜபருல்லாஹ் கான்** | Ph: 04367 - 234987, 233094<br>Cell : 98424 33094, 96984 58016 |
| மீமிசல் | **K. ராவுத்தர் நெய்னா, B.Com** | Cell : 99426 56825 |
| திருமுல்லைவாசல் | **M.G.M. பைஜீ ஹஜ்ரத்** | Cell 94428 - 20040, 93627 99859 |
| லால்பேட்டை | **தளபதி ஷபீக்குர்ரஹ்மான்** | Cell: 97872 80133, 98949 52806 |
| அறந்தாங்கி | **S. முஹம்மது கனி, எரிச்சி** | Ph: 04371 - 236340 Cell: 97869 49711 |
| பரமக்குடி | **A.S. ஜலாலுத்தீன் மன்பஈ** | Cell: 98437 60242 |
| மேட்டுப்பாளையம் | **A. முகம்மது இப்ராஹீம் ஆலிம்** | Ph: 04254-222786, Cell: 98437 60790 |
| கோயமுத்தூர் | **A. இனாயத்துல்லாஹ்** | Cell: 94436 82628 |
| தஞ்சாவூர் | **M. செய்யது அகமது ஆலிம்** | Cell : 94439 41634 |